டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்

மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 30.6.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 012 - Madurai | Online Edition

# நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதியில் 2 நாட்கள் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜுன் 29

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, 30.6.24 மற்றும் 1.7.24ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலை பகுதிகளில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

2 முதல் 5ம் தேதி வரையில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை, காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களைப் பொறுத்தமட்டில், இன்று முதல் 3.7.24 வரையில் மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென்தமிழக கடலோரப்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

இன்று வடமேற்கு மற்றும் மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வடக்கு ஆந்திரகடலோரப்பகுதிகள், தெற்கு, மத்திய மற்றும் வடக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேளாண் பட்டதாரிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மதுரை, ஜூன் 29

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார கிராமங்களில் உள்ள வேளாண் பட்டதாரிகளை தொழில் முனைவோராக மாற்றுவதற்காக தமிழக அரசானது இளம் வேளாண் தொழில் முனைவோராக்குதல் திட்டத்தின் மூலமாக விண்ணப்பங்களை வரவேற்கின்றது இத்திட்டத்தினை அடைய விரும்பும் வேளாண் பட்டதாரிகள் கீழ்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- வயது வரம்பு – 21-40.
- கல்வி தகுதி – வேளாண்மையில் இளங்கலை பட்டப்படிப்பு.
- அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணியில் இருக்கக் கூடாது.
- விண்ணப்பதாரர் கணினித்திறன் பெற்றிருக்க வேண்டும்.
- ஒரு குடும்பத்திற்கு ஒரு பட்டதாரி மட்டுமே நிதி உதவி பெறத் தகுதியுடையவர்.




- வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிவோர் நிறுவனத்தின் உரிமையானது தனியுரிமையாக இருக்க வேண்டும்.
- பயனாளி தனது மூலதனத்தின் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைபடுத்தல் திட்டம் (PMFME) வேளாண்மை உள்கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் அனுமதிக்கக் கூடிய திட்டங்களின் அடிப்படையில் சுய தொழில்கள் நிறுவ வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

● வங்கி கடன் உதவியுடன் கூடிய தொழில்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகள் மானிய தொகை போக மீதமுள்ள தொகைக்கு வங்கி கடன் உதவி பெற்றதற்கான சான்றிதழைக் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். வேளாண்மை உள்கட்டமைப்பு நிதி (AIF) குறித்து கூடுதல் விவரங்கள் அறிய https://agriinfra.dac.gov.in என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறை படுத்தும் திட்டம் (PMFME) குறித்த கூடுதல் விவரங்களை அறிய https://pmfme.mofpi.gov.in என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

## தேவையான ஆவணங்கள்

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு சான்றிதழ்
- பட்டபடிப்பு சான்றிதழ்
- ஆதார் அட்டை
- குடும்ப அட்டை
- பயனாளியின் வங்கிக் கணக்கு புத்தகம்
- வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம்
- தொடங்கவுள்ள தொழில் குறித்த விவரங்கள்

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் தகுதியான வேளாண் பட்டதாரிகள் தங்களின் விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் மதுரை மாவட்ட மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். தேர்வு செய்யப்படும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு அவரது தொழில் வங்கிக்கடன் அடிப்படையில், மானியமாக ரூ.1 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) கள ஆய்விற்கு பின்னர் விடுவிக்கப்படும் என மதுரை மாவட்ட மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன் தெரிவிக்கின்றார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

EDII பெரியகுளம் தோட்டக்கலைத்
தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
பெரியகுளம், தேனி மாவட்டம்

# லாபம் தரும் பால் காளான் தொழில்முனைவோராக EDII பெரியகுளம் அன்புடன் அழைக்கிறது...

முதல் பேட்ச்
25 நபர்கள் மட்டுமே.
பேட்ச்
ஜூலை 20, 2024
துவங்குகிறது

## பால் காளான் பண்ணை நேரடி பார்வையிடல்
30.06.2024, ஞாயிற்றுக்கிழமை

கட்டணம்
ரூ.20,000

தங்கள் சந்தேகங்களை நேரில் தெளிவுபடுத்திக் கொள்ள அருமையான வாய்ப்பு



நேரடி பார்வையிடலுக்கு முன்பதிவு அவசியம்

6379140583 என்ற எண்ணில் அழைத்து முன்பதிவு செய்து கொள்ளவும்

- 5 நாட்கள் தொழில்நுட்ப பயிற்சி
- 2 ஆண்டுக்கு தொடர்ந்த தொழில்நுட்ப உதவி
- கடனுதவி மற்றும் மானியம் பெறுவதற்கு உதவி
- மார்க்கெட்டிங் / கொள்முதல் உத்தரவாதம்

இடம் :
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
பெரியகுளம், தேனி மாவட்டம்
நேரம் : காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

நாள் ஒன்றுக்கு ரூ.3000 முதல் ரூ.5000 வரை நிகர வருமானம் ஈட்ட வாய்ப்பு !

**விண்ணப்பிக்க கடைசி தேதி : 15.07.2024**

தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
பெரியகுளம், இந்தியா - 625 604. 9361921828 / 6379140583
ceo@ediiphbif.org, ediitnaupkm@gmail.com, www.ediiphbif.org

# துவரையில் வாடல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள்

## வாடல் நோய் பரவுவதற்கு சாதகமான சூழ்நிலைகள்

மண்ணின் வெப்பநிலை குறைவாக (25 செ.க்கு கீழ்) இருத்தல். குறைந்த மண்ணின் வெப்பநிலை மற்றும் வளர்ந்த முற்றிய செடிகள் 30 சதவிகிதம் மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனிலும், 20° முதல் 30° செ. வரையிலான மண்ணின் வெப்ப நிலையிலும் பூஞ்சைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.

## அறிகுறிகள்

இந்நோய் பயிரின் அனைத்து வளர்ச்சிப் பருவங்களிலும் காணப்படும். தாக்கப்பட்ட செடிகள் மெதுவாக வாடி காய்ந்து விடும். முதலில் அடியிலைகள் மஞ்சளாகும். பாதிக்கப்பட்ட தண்டுகள் கழுத்துப்பகுதியில் கருப்புநிறத்துடன் காணப்படும். இவை மேலாகப் பரவி கிளைகளையும் தாக்கும். இதனால் இலைகள் வாடி உதிர்ந்து விடும். கிளைகள் மற்றும் தண்டுகள் காய்ந்து செடி இறந்து விடும். தண்டுப்பகுதியின் உள்ளே சாற்றுக் குழாய் தொகுப்புகள் பழுப்புநிறத்துடன் காணப்படும்.

## நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்

முதல் நிலை நோய்ப் பரவல் மண் மற்றும் விதைகள் வழியாக பூஞ்சாண இழை மூலம் பரவுகின்றது. இப்பூஞ்சாண இழைகள் 20 ஆண்டுகள் வரை உயிர் வாழும். இரண்டாம் நிலை நோய்ப் பரவல் பூஞ்சாண வித்துகள் மூலம் பாசன நீர் மற்றும் பண்ணைக்கருவிகள் வழியாக நடைபெறும்.

## மேலாண்மை முறைகள்

விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி (4.0 கிராம்/கிலோ) அல்லது கார்பன்டசிம் (20 கிராம்/கிலோ) கொண்டு விதை நேர்த்திச் செய்யவேண்டும். அடியுரமாக துத்தநாகச் சல்பேட் (25 கிலோ / எக்டர்) மற்றும் வேப்பம் புண்ணாக்கு (150 கிலோ /எக்டர்) இட வேண்டும். தொடர்ந்து துவரை சாகுபடி செய்வதை தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்டு இறந்த பயிர்களை உடனே அகற்ற வேண்டும். ஒரு எக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ் புளூரசன்ஸ் அல்லது டிரைக்கோடெர்மா விரிடியை 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது மணலில் கலந்து விதைத்த 30 நாட்கள் கழித்து இட வேண்டும்.

கார்பன்டசிம் 1 கிராம் /லிட்டர் என்ற அளவில் பாதிக்கப்பட்ட செடிகளின் வேர்ப்பகுதியைச் சுற்றி ஊற்ற வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியுள்ள துவரையின் இரகங்களை (வம்பன் 3, கோ 7, கோ 8 மற்றும் கோ 9) பயிர் செய்யலாம் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய புள்ளியியல் தின விழா



கோவை, ஜூன் 29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இயற்பியல் அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பாக 28.6.24 அன்று தேசிய புள்ளியியல் தின விழா நடைபெற்றது.




இதன் பகுதியாக, புள்ளியியல் வினாடி வினா போட்டி 27.6.24 அன்று நடத்தப்பட்டது. அதில் மூன்று சுற்றுகள் மூலம் 100 பங்கேற்பாளர்களைக் கொண்ட 50 அணிகளிலிருந்து மூன்று அணிகள் வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. வருகை தந்த பிரதிநிதிகளை புள்ளிவிவரங்கள் பேராசிரியர் முனைவர் எம்.விஜயபாமா வரவேற்றார். வேளாண் பொறியியல் முதல்வர் முனைவர் ஏ.ரவிராஜ், தனது சிறப்புரையில், நமது அன்றாட வாழ்விலும் ஆராய்ச்சி தொடர்பான செயல்பாடுகளிலும் வெளியீடு களிலும் புள்ளி விபரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். முதன்மை விருந்தினராக, புள்ளியியல் துறை துணை இயக்குநர் அமுதவல்லி, புள்ளியியல் துறையில் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை மேற்கொள்ள ஊக்கப்படுத்தினார். தரவு சேகரிப்பில் ஈடுபட்டுள்ள செயல்முறை மற்றும் நாடு தழுவிய தரவுத்தளத்தை (https://tn.data.gov.in/) உருவாக்குவதையும் அதின் முக்கியத்துவத்தையும் அவர் விவரித்தார். பல்வேறு துறைகளில் புள்ளி விவரங்களின் நோக்கம் மற்றும் முக்கியத் துவத்தை விளக்கினார். இறுதியாக, இணைப் பேராசிரியர் முனைவர் ஆர்.கங்கைச் செல்வி நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

# நிலக்கடலையில் போரான் பற்றாக்குறை அறிகுறிகள் மற்றும் நிவர்த்தி செய்யும் முறைகள்!

நிலக்கடலையில் வளரும் நுனி இலைகள் சிறுத்தும் உருமாறியும், துடித்து மொரமொரப்பாக இருக்கும். நடுத் தண்டின் நுனிக்குருத்து கருகும். கடலை காய்களின் தோலில் கருப்பு நிறப் புள்ளிகள் தோன்றும். பருப்பு சிறுத்து பொக்குக் கடலைகள் (Pop pods) அதிகரிக்கும். பருப்பை உடைத்துப் பார்த்தால் பருப்பின் நடுவில் குழிவான பழுப்பு நிறப் பள்ளங்கள் தோன்றும். விதையின் கரு குருத்துக்கள் பழுப்பு நிறமாக மாறி கருகி விடும். இதனை (Hollow heart) என்று அழைக்கிறோம்.

**நிவர்த்தி செய்யும் முறை**

போரான் சத்து குறைபாடு உள்ள நிலங்களுக்கு எக்டருக்கு 10 கிலோ போராக்ஸை அடியுரமாக இட வேண்டும். போராக்ஸ் 0.3 சதவீதம் (3கிராம் / லிட்டர் தண்ணீருக்கு) கரைசலை பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் இலைவழியாக 15 நாட்கள் இடை வெளியில் தெளிக்க வேண்டும் என சேலம் மாவட்டம், பனமரத்துப் பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

# பயறுவகைப் பயிர்களுக்கு 2 சதம் டிஏபி உரக்கரைசல் தெளித்து அதிக மகசூல் பெறலாம்!

பயறுவகை சாகுபடி தொழில்நுட்பத்தில் ஒரு முக்கிய அங்கம் பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் பருவத்தில் 2 சதம் டிஏபி உரக்கரைசல் தெளிக்கும் தொழில்நுட்பம் ஆகும். இந்த தொழில் நுட்பத்தினை கடைபிடிப்பதனால் மட்டுமே ஒரு ஏக்கருக்கு சுமார் 50–75 கிலோ பயறுவகை மகசூல் கூடுதலாக கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

தற்சமயம் தாரமங்கலம் வட்டாரத்தில் பயறு வகை பயிர்களான பச்சைப்பயறு மற்றும் தட்டைப்பயறு சாகுபடி செய்யப்பட்டு பயிர்கள் பூக்கும் தருணத்தில் உள்ளது. இத்தருணத்தில் பயறுவகைப் பயிர்களில் மகசூல் அதிகரிக்க நிலத்தில் ஈரம் இருக்கும் போது (மழை பெய்தவுடன்) 2 சதம் டிஏபி உரக்கரைசல் (இலை வழி உரம்) தெளித்தல் மிகவும் அவசியம். இலை மூலம் நாம் ஊட்டச்சத்து அளிக்கும் போது வளரும் விதைகளுக்கு ஊட்டம் எளிதில் போய் சேரும். அதனால் அவை விரைவில் வளர்ந்து வீரிய விதை உற்பத்திக்கு வழி வகுக்கும்.

2 சதம் டிஏபி உரக்கரைசல் தயாரிக்க கீழ்கண்ட இடு பொருட்கள் தேவை. (ஒரு ஏக்கருக்கு)

1) 4 கிலோ டி.ஏ.பி உரம்,

2) 200 லிட்டர் தண்ணீர்,

3) கைத்தெளிப்பான்

4) வடிகட்ட மெல்லிய துணி

முதலில் 4 கிலோ டிஏபி உரத்தினை 10 லிட்டர் நீரில் உரக்கரைசல் தெளிப்பதற்கு முந்திய நாள் இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். மறு நாள் தெளிந்த நீரை மட்டும் எடுத்து துணியின் துணைகொண்டு வடிகட்டி விடவேண்டும். இந்த உரக்கரைசலை 190 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் ஒரு ஏக்கர் தெளிக்க பயன்படுத்த வேண்டும். பயறுவகைப் பயிர்களின் பூக்கும் திறனை அதிகப்படுத்தவும், அதிக மகசூல் பெறவும் பயறுவகைப் பயிர்கள் பூ




பூக்க ஆரம்பித்தவுடன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும் மண்ணில் போதிய ஈரப்பதம் இருக்கும் போது காலை அல்லது மாலை வேலைகளில் செடிகள் நன்கு நனையும்படி கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு இரு முறை தெளிக்க 10 கிலோ டிஏபி உரம் தேவைப்படும்.

ஒரு ஏக்கர் டிஏபி உரக்கரைசல் இருமுறை தெளிக்க தோரயமாக ரூ.1000/- செலவாகும். இதனால் ரூ.2500/- முதல் ரூ.3000/- வரை கூடுதல் வருமானம் கிடைக்கும். எனவே அனைத்து விவசாயிகளும் இந்த பருவத்தில் பயறுவகைப்பயிர்களுக்கு 2 சதம் டிஏபி உரக்கரைசல் தெளித்து பயனடையுமாறும், மேலும் விவரங் களுக்கு தாரமங்கலம் வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகவும்.

இதனை, மு.கஜேந்திரன், திட்ட ஒருங்கிணைப்பாளர் (வே.தொ.மே.மு), வேளாண்மை உதவி இயக்குநர், தாரமங்கலம் தெரிவித்தார்.

# மண்ணச்சநல்லூரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



திருச்சி, ஜூன் 29

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மூலம் செயற்கை உரங்கள் குறைபாடு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி உழவர் மையம் மண்ணச்சநல்லூரில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) பரமசிவம் தலைமையில் நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் அபிராமி வரவேற்பு வழங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) பரமசிவம் கலந்து கொண்டு பேசும் வகையில் மண்வளம் மற்றும் முதலமைச்சரின் 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்', வேளாண்மைத் துறை திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கி கூறினார். அட்மா சேர்மன் ஸ்டீஃபன் கென்னடி பாரம்பரிய பயிர் சாகுபடி முறைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

வேளாண்மை கல்வி நிலையம் குமுளூர் சார்பில் முனைவர் விஜய் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மூலம் செயற்கை உரங்களை குறைக்கும் முறைகள் பற்றிய தொழில் நுட்பங்களை வழங்கினார். பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். மூத்த வேளாண்மை அலுவலர் உஷா ராணி மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவம் மற்றும் மண் ஆய்வு முறைப்படி உரப் பயன்பாடு பற்றி விரிவாக விளக்கி கூறினார். மூத்த உதவி வேளாண்மை அலுவலர் சின்னபாண்டி உழவன் செயலி பயன்பாடு குறித்து எடுத்துக் கூறி நன்றி உரையாற்றினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சிந்தியா ஆகியோர் செய்திருந்தனர்.

# பயறுவகைப் பயிர்களில் சாம்பல் நோய் மேலாண்மை முறைகள்

**அறிகுறிகள்**

● முதலில் சாம்பல் நிறத் தூள் திட்டுகள் இலைகளின் மேற்பரப்பில் தோன்றும். இத்திட்டுகள் மெதுவாக வளர்ந்து இலை முழுவதும் பரவி பிறகு அடிப்பரப்பிலும் தோன்றும். இலைகளைத் தொடர்ந்து மற்ற பகுதிகளிலும் வெண்ணிறத் திட்டுகள் காணப்படும்.

● பாதிக்கப்பட்ட பகுதிகள் சுருங்கி உருமாறிக் காணப்படும். நோய்த் தீவிரமாகும் போது பயிர்கள் விரைவாக முதிர்ச்சி அடைவதால் விளைச்சல் மிகக் குறைந்துவிடும்.

**நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்**

● இப்பூஞ்சாணம் உயிர் சார் ஒட்டுண்ணி வகையைச் சார்ந்ததாகும்.

● இப்பூஞ்சாணம், பாதிக்கப்பட்ட பயிர்க்கழிவுகளின் மேல் பாலினக் கலப்பு வித்தாக (கிளிஸ்டோதீசியம்) வாழும்.

● சாம்பல் நோய் பூஞ்சாணத்திலிருந்து வெளிப்படும் கொனிடியா வித்துகள் மூலம் வேகமாக பரவும்.

**மேலாண்மை முறைகள்**

● ஜூன் மாத ஆரம்பத்தில் விதைப்பதன் மூலம் நோய்த் தாக்குதலிலிருந்து பயிர்கள் பாதுகாக்கப்படுகிறது.

● நோய்த் தென்பட்டவுடன் கார்பன்டசிம் (1.0 கிராம் / லிட்டர்) அல்லது நனையும் கந்தகம் (2.0 கிராம் /லிட்டர்) அல்லது புரோப்பிகோனசோல் (1.0 மி.லி. / லிட்டர்) தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

● பூஞ்சாணக் கொல்லிகளுக்குப் பதிலாக வேப்பங்கொட்டை வடிசாறு (5.0 சதவிகிதம்) அல்லது வேப்ப எண்ணெய் (3.0 சதவிகிதம்) பத்து நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா கூறினார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க செய்ய வேண்டிய உத்திகள் என்ன?



இன்றைய சூழ்நிலையில் விவசாயிகள் கண்ட கண்ட உரங்களை வாங்கி போடுவதில் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டு மண்வளத்தை கெடுத்தது மட்டுமல்லாமல் கடனாளியாகவும் மாறி விடுகிறார்கள். நம்முடைய நிலத்திற்கு என்ன உரம் தேவை, அதை எப்படி சிக்கனமாக, பாதுகாப்பான முறையில் பயன் படுத்துவது மற்றும் திறனை அதிகரிக்க வழி தெரியாத நிலையில் தான் பல உழவர்கள் தான் உள்ளனர். இதனால் சாகுபடி செலவு அதிகமாகி விடுவதால் என்ன செய்வது என விழி பிதுங்கி உள்ளனர்.

**அதற்கான உத்திகளை எப்படி கையாளுவது குறித்து பார்ப்போம்.**

1) பொதுவாக மண் மாதிரி ஆய்வு செய்து அதற்கேற்ப உரமிடுதலை பின்பற்ற வேண்டும்.

2) கார மண்ணிற்கு அமில உரங்களையும், அமில நில மண்ணிற்கு கார உரங்களையும் அளிக்க வேண்டும். மண் எதிர் விளைவுகளை பொருத்து உரங்களை தேர்ந்தெடுக்கபட வேண்டும். அது தான் சரியான முறையாகும்.

3) உரங்களை எப்போதும் மேலோட்டமாக தெளிக்கக்கூடாது.

4) உரங்களை இட வைப்பு முறையில் (PLACEMENT OF FERTILIZERS) விதையின் அருகிலோ அல்லது செடியின் அடியிலோ 3 முத ல்5 செ.மீ இடைவெளியில் இடவேண்டும்.

5) மணிசத்து (P) சாம்பல் சத்து (K) உரங்களை அடியுரமாக இடவேண்டும். அவ்வாறு இடுவது தாவரங்களின் வேர் வளர்ச்சி அதிகரிக்க உதவும்.

6) உரக்கலவை அட்டவணை படி உரங்களை கலக்கி முடிந்த அளவிற்கு அதே உரக்கலவை இட வேண்டும்.

7) கடின மண் நிலங்களில் தழைசத்து உரத்தில் (N) பாதியளவு அடியுரமாக இட வேண்டும்.

8) உரமிட்ட 1 வாரத்திற்கு அதிகமாகவோ, நீர் பாய்ச்சுவதோ அல்லது நீர் தேங்கி இருப்பதோ கூடாது.

9) தேங்கியுள்ள நீரை வடித்துபின் களைகளை அகற்றிய பின்னர் தான் மேல் உரமிட வேண்டும் (TOP DRESSING).

10) அமில மண் வகை நிலங்களில் சுண்ணாம்பு பொருட்களுடன் தேவைக்கேற்ப நேர்த்தி செய்ய வேண்டும்.

11) வறண்ட நிலங்களில் தழை சத்தை இலைவழி தெளிப்பாக (FOLIAR SPRAY) இட வேண்டும்.




12) மண் வளத்தை மேம்படுத்த அங்கக உரங்கள், பசுந்தாள் உரங்களை 3-5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டாயம் இட வேண்டும்.

13) பாசி படர்ந்த நெல் வயலில் டி.ஏ.பி போன்ற உரங்களை இடக்கூடாது.

இது போன்ற உத்திகளை கடைபிடித்தால் உரச் செலவை குறைப்பதுடன் மண்வளமும் பாதுகாப்பதுடன் நிச்சயமான மகசூலை பெறலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# கிராம அளவிலான வேளாண் முன்னேற்ற குழுவிற்கு பயிற்சி



அரியலூர், ஜூன் 29

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் அட்மா திட்டத்தில் காரீப் பருவத் திற்கான கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக்குழு பயிற்சி விவசாயிகளுக்கு, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நாயகனைபிரியாள் கிராமத்தில் நடைப்பெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தலைமையேற்று பேசுகையில் பசுந்தாள் உர பயிர்களை பயிரிட்டு இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து விவசாயம் செய்யுமாறு கூறினார்.

அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும், உயிர் வேலியின் பயன்பாடு குறித்தும், கடலை சாகுபடியில் இலைப்புள்ளி நோய் மற்றும் வேர்அழுகல் நோயை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்தும் மற்றும் வேளாண் திட்டங்கள் குறித்தும் விளக்கி கூறினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் உழவியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின் கலந்துக் கொண்டு விவசாயிகளிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில், மண் மாதிரி எடுத்தலின் முக்கியத்துவம், உழவன் செயலியின் பயன் பாடுகள், கோடை உழவின் முக்கியத்துவம், விதைநேர்த்தியின் அவசியம், பசுந்தாள் உரப்பயிர்களின் முக்கியத்துவம் அங்கக வேளாண்மைக் குறித்தும், நுண்ணூட்டத்தின் பயன்பாடு குறித்தும், மக்காச்சோளப்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றி, சுற்று சூழல் பாதிக்காமல், பயிர்களை தாக்கும் பூச்சிகள், நோய்களை கட்டுப்படுத்த இயற்கையுடன் இயைந்த பல முறைகளான உழவியல் முறைகள், கைவினை முறைகள், உயிரியல் முறைகள்

முறைகள் மற்றும் இரசாயன முறைகள் ஒரு சேர ஒருங்கிணைத்து, பயிர்கள் அந்தந்த பருவங்களில், தேவைக்கேற்ப உரியவாறு கையாண்டு, குறைந்த செலவில் பயிரை பாதுகாத்து நிறைந்த நல் விளைச்சலை பெறகூடிய தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும் என விரிவாக எடுத்துக் கூறினார்.

இனக்கவர்ச்சி பொறி மற்றும் தீமை செய்யும் பூச்சிகள், நன்மை செய்யும் பூச்சிகள் குறித்தும் விரிவாக எடுத்து கூறி, தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறினார். முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் தினேஷ் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து நன்றியுரையாற்றினார். இப்பயிற்சியில் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் உஷா, அட்மா திட்ட உறுப்பினர் ராமதுரை, ஊராட்சி மன்ற தலைவர் ராசாராம் நாயகனைபிரியாள் கிராமத்தை சேர்ந்த விவசாய பெருமக்கள் கலந்துக் கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொழில்முனைவோருக்கான விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி



கோவை, ஜூன் 29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் விதை மையத்தில் தொழில் முனைவோருக்கான தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பப் பயிற்சியானது விவசாயிகளுக்கு 26.6.24 மற்றும் 27.06.24 ஆகிய இரண்டு நாட்கள் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) திட்டத்தின்கீழ் நடத்தப் பட்டது. இப்பயிற்சியின் துவக்க உரையில் விதை மைய இயக்குநர் முனைவர் ர.உமாராணி, கலந்து கொண்டு பேசுகையில் தரமான விதைகளின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு ஆகிவற்றைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும், விவசாயிகள் விதை உற்பத்தி செய்து தரமான விதை களை மற்ற விவசாயிகளுக்கு வழங்கிட முன்வர வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் முனைவர் ஏ.சோமசுநதிதரம் விதை உற்பத்தி மூலம் கிடைக்கும் அதிக வருவாய் மற்றும் விதை வணிகம் பற்றிய விபரங்களை தனது சிறப்புரையில் எடுத்துரைத்தார். அங்கக முறையில் உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கு அதிகளவு தேவை உள்ளது எனவும் அதனால் விவசாயிகள் பெருமளவில் விதை உற்பத்தி செய்ய முன்வர வேண்டும் என்றும் வேண்டினார். நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் சி.திருமலா ராவ், வங்கியின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்குரிய பல்வேறு திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். மேலும், அவர் கூறுகையில் மகளிர் மற்றும் தொழில்முனைவோருக்கான நபார்டு வங்கியின் மூலம் செயல்படுத்தப்படும் பயிற்சிகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். மேலும், விவசாயிகள் மற்றும் மகளிர் நபார்டு வங்கியின் திட்டங்களை செயல்படுத்தி கிராமப்புற வளர்ச்சிக்கு உதவிடுமாறு கேட்டுக்

கொண்டார். இரண்டு நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த விளக்கங்களும், செயல் விளக்கங்களும் விஞ்ஞானிகளால் எடுத்துரைக்கப்பட்டன.

விவசாயிகள் விதை உற்பத்தி வயல்களையும், சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டனர். பல்வேறு தொழில் நுட்பங்கள் அடங்கிய பயிற்சிக் கையேடும் விவசாயிகளுக்கு பயிற்சியின் போது வழுங்கப்பபட்டது. இப்பயிற்சியில் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சியின் போது விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வே.மனோன்மணி, வரவேற்புரையும், பேராசிரியர் முனைவர் க.இராஜா நன்றியுரையும் வழங்கினர்.

# விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து பயிற்சி

கிருஷ்ணகிரி, ஜுன் 29

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி தாலுகா, வெங்கடேசபுரம் ஊராட்சி அட்மா திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் ஜான் லூர்து சேவியர் தலைமை தாங்கி பேசியதாவது, பயிரின் ஊட்டச்சத்து தேவையை இயற்கை மற்றும் செயற்கை ஆதாரங்களின் மூலம் கொடுத்தால் ஊட்டச்சத்து அளிப்பை அது ஒருங்கிணைத்து, பயிர்களுக்கு சமச்சீர் ஊட்டத்தை அளிக்கும். மண்ணின் இயல், வேதியியல், உயிரியல் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது. பயிர்களின் ஊட்டசத்து மேலாண்மை குறித்து அலுவலர்களிடம் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். மண் வளத்தின் தன்மை, குறைகளை தீர்க்கக்கூடிய சிறப்பு மேலாண்மை பற்றி முடிவு செய்யவேண்டும். விவசாயி களின் பொருளாதார நிலைமை, ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தில் பெறக்கூடிய லாபம் மற்றும் சுற்றுபுறச்சூழலை கவனத்தில் கொண்டு தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதில் அதியமான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் முதல்வர் ஸ்ரீதரன் உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன், ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீகாந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முஹம்மது ரபி, பழனிசாமி பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

# பெருந்துறை வட்டாரத்தில் உர மேலாண்மை மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்தல் பயிற்சி



ஈரோடு, ஜூன் 29

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் சீனாபுரம் வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு உர மேலாண்மை மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்தல் பயிற்சி பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் பேசுகையில் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்கள் பற்றியும், நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். ஜே.ஜே.எம் உதவி பேராசிரியர் முனைவர் சு.போஜராஜ் கலந்து கொண்டு மண் பரிசோதனை மூலம் உர மேலாண்மை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் ஒவ்வொரு பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிட வேண்டும் என்பதை வலியுறுத்தி கூறினார். இதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைக்க முடியும் என்பதை பற்றியும் மேலும் கால்நடை கழிவுகளைக் கொண்டு அங்கக முறையில் உர மேலாண்மையை கடைப்பிடிக்கும் வழிமுறைகளை அதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைக்க முடியும் என்பதை விளக்கமாகவும் வாழை, கரும்பு பயிர்களின் கழிவுகளை கொண்டு தொழுவுரம் தயாரிக்கும் முறைகள், மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள், கால்நடை கழிவுகளை உரமாக்கும் முறைகள், பசுந்தாள் உரமுறைகள், அசோலா வளர்ப்பு, பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு அதன் கழிவுகளை உரமாக்கும் முறைகள், அங்கக இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் ரவிசந்திரன் பேசுகையில் PM Kissan பற்றியும் மற்றும் துறை சார்ந்த திட்டங்களை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வலையபட்டி கிராம முன்னேற்ற குழுவிற்கு காரி பருவ கால பயிற்சி



விருதுநகர், ஜூன் 29

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டாரத்தில் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட வலையபட்டி பஞ்சாயத்திற்கு உட்பட கிராம விவசாயி களுக்கு 28.6.24 அன்று 40 விவசாயிகளுக்கு வேளாண்மை துறை மற்றும் சகோதர துறை மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டது. இதில் இதில் வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை துறை மூலம் நடைபெறும் மாநிலத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும் உயிர் உரங்களின் அவசியம் குறித்து விளக்கிக் கூறினார். விருதுநகர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம் சுமதி சிறப்புரை வழங்கினார். உரையில் மத்திய அரசு மூலம் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் மற்றும் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகியவை குறித்து விளக்கினார். இக்கூட்டத்தில் வேளாண்மை துறை தோட்டக்கலை துறை பட்டு வளர்ச்சி துறை வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை மற்றும் வலையபட்டி பஞ்சாயத்து தலைவர் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.மேலும் கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை சார்பாக கலந்து கொண்ட வேளாண்மை உதவி இயக்குனர் சங்கீதா, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் கீழ் பந்தல் சாகுபடி அமைத்தல் கமலம்பழம் சாகுபடி மற்றும் மானியத் திட்டத்தின் பழக்கன்றுகள் வழங்குதல், மேலும் மாநில தோட்டக் கலைத் திட்டத்தின் காய்கறி நாற்றுகள் மற்றும் விதைகள் வழங்குதல் குறித்து விரிவாக விளக்கிக் கூறினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையின் சார்பாக கார்த்திக், உதவி வேளாண்மை அலுவலர், கலந்து கொண்டு துறை சார்ந்த மானிய திட்டங்கள், கொள்முதல் நிலையம் அமைக்க பயனாளிகள் தேர்வு செய்தல், வணிகம் சார்ந்து வேளாண்மை கொண்டு செல்லுதல் ஆகியவை பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது. பட்டு வளர்ச்சி துறை சார்பாக பொன் செல்வம், கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களின் கீழ் மல்பெரி நடவு, புழு வளர்ப்பு மனை ஆகியவற்றிற்கான மானியங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன், விரிவாக்க சீரமைப்பு திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் மானியங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில் நுட்ப மேலாளர் மாரிராஜ் மற்றும் ராம்பிரகாஷ் உதவி தோட்டக்கலை அலுவலர் சிறப்பாக செய்தனர்.

# பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

சேலம், ஜுன் 29

எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், நிலையான வருமானம் கிடைக்கச்செய்து அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் மத்திய அரசின் புதிய வழிகாட்டுதலின் படி, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் காரீப் 2024 பருவத்தில் சோளம், நிலக்கடலை, பயிர்களுக்கு 16 ஆகஸ்ட் வரையில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம். பிரிமீயத் தொகையாக ஒரு ஏக்கருக்கு சோளம் ரூ.194/- நிலக்கடலை ரூ.421/- செலுத்த வேண்டும்.

எனவே விவசாயிகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் அடங்கல், நில உரிமை பட்டா, ஆதார் அட்டை நகல் மற்றும் நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தகத்துடன் உரிய பிரீமியத் தொகையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்களை செலுத்தி பயிர் காப்பீடு செய்து, இடர்பாடு ஏற்படும் காலத்தில் பயிர் காப்பீடுத் தொகை பெற்று பயன் பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா கேட்டுக் கொண்டார்.

# ஈரோடு வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஜுன் 29

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் 2024-2025 ஆம் ஆண்டுக்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படும் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு அமைக்கப்பட்டு அக்குழுக்களுக்கு காரீப் பருவ விவசாயிகள் பயிற்சியானது கூரபாளையம் கிராமத்தில் நடைபெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.சாமுவேல் அறிக்கையில் தெரிவித்துள்ள தாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் செயல் படும் கூரபாளையம் வருவாய் கிராமத்தில் கிராம வேளாண்

முன்னேற்றக்குழு விவசாயிகளுக்கு பயிற்சி ஊராட்சி மன்ற தலைவர் டி.வி.குணசேகரன் முன்னிலையில் ஈரோடு வட்டார தோட்டக்கலை அலுவலர் ப.சவிதா தலைமையில் நடைபெற்றது. இந்த விவசாயிகள் பயிற்சியில் பவானிசாகர், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் வி.சத்தியசீலன் கலந்து கொண்டு தென்னை மற்றும் மஞ்சள் பயிர்களில் ஏற்படும் நோய்கள், பூச்சி தாக்குதல் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

தோட்டக்கலை அலுவலர் ப.சவிதா கிராம வேளாண் முன்னேற்றக் குழு அமைத்ததன் முக்கிய நோக்கமான தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் சூரிய மின்சக்தியின் மூலம் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்களையும் தென்னை மற்றும் மஞ்சள் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும்




தெளிவாக விளக்கினார். ஈரோடு வட்டார செயற்பொறியாளர் டி.சந்திரசேகரன் சூரிய மின்சக்தியின் மூலம் பம்பு செட்டுகள் அமைத்தல், நுண்ணீர் பாசன மானிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். கால்நடைத் துறை சார்பாக டீ.தனராஜம் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு நடைபெறும் முகாம்கள் பற்றிய விபரங்களை கூறினார். கூரபாளையம் கிராம நிர்வாக அலுவலர் ஆர்.பாலசுப்பிரமணியம் பயிர் சாகுபடி விபரங்களை பதிவு செய்வதன் அவசியம் குறித்தும் தெளிவாக விளக்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா அட்மா திட்டங்களின் செயல்பாடுகள், அங்கக இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் புஷ்பலதா உழவர் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகள் இடுபொருட்களின் மானிய விபரங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். உதவி தோட்டக்கலை அலுவலர் கவிதா கலந்து கொண்டு தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படும் திட்டங்களை எடுத்துரைத்தார்.


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
உரச்செலவை குறைக்கிறது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
குருணை உரங்களை விட விலை குறைவு
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
NANO FERTILISER
FCO Approved
Less Cost, More Profits
Suitable for all Crops
500 ml
விலை ரூ.600/-

# பாரம்பரிய நெல் இரகங்களின் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ குணங்கள் – ஓர் பார்வை

நேற்றைய தொடர்ச்சி...

**காடைகழுத்தான்**




காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள சுக்கன் கொள்ளை கிராமத்தில் விளையக் கூடியவை. சம்பா பயிர். இதன் கால அளவு 165 நாட்களாகும்.

அரிசி வெள்ளை நிறத்துடன் சிறந்த தரத்துடன் இருக்கும். மகசூல் – 1350 கிலோ/ஏக்கர். அதாவது வெள்ளைநிற வளையம் போன்று அதில் உள்ளதால் இப்பெயரைப் பெறுகிறது. தென் இந்திய சிறப்பு உணவுப் பண்டமான ‘புட்டு‘ செய்வதற்கு ஏற்றது.

**முக்கியமான பாரம்பரிய நெல் இரகங்கள்**

1.அன்னமிளகி
2.அறுபதாங்குறுவை
3.கேரளசுந்தரி
4.குழியடிச்சான் (குழி வெடிச்சான்)
5.குள்ளங்கார்
6.மைசூர்மல்லி
7.குடவாழை
8.கட்டுடை ஓனான் என்ற காட்டுயானம்
9.காட்டுப்பொன்னி
10.வெள்ளைக்கார்
11.மஞ்சள் பொன்னி
12.கருப்புச் சீரகச்சம்பா
13.கட்டிச்சம்பா
14.குருவிக்கார்
15.வரப்புக் குடைஞ்சான்
16.குறுவைக் களஞ்சியம்
17.கம்பஞ்சம்பா
18.பொம்மி
19.காலா நமக்
20.திருப்பதிசாரம்
21.அனந்தனூர் சன்னம்
22.பிசினி
23.வெள்ளைக் குருவிக்கார்
24.விஷ்ணுபோகம்
25.மொழிக்கருப்புச் சம்பா
26.காட்டுச் சம்பா
27.கருங்குறுவை
28.தேங்காய்ப்பூச்சம்பா
29.காட்டுக் குத்தாளம்
30.சேலம் சம்பா
31.பாசுமதி
32.புழுதிச் சம்பா
33.பால் குடவாழை
34.வாசனை சீரகச்சம்பா
35.கொசுவக் குத்தாளை
36.இலுப்பைப்பூச்சம்பா
37.துளசிவாச சீரகச்சம்பா
38.கொட்டாரச் சம்பா
39.கைவிரச்சம்பா
40.கந்தசாலா

41.பனங்காட்டுக் குடவாழை
42.சன்னச் சம்பா
43.இறவைப் பாண்டி
44.செம்பிளிச் சம்பா
45.நவரா
46.கருத்தக்கார்
47.ஆத்தூர் கிச்சலி சம்பா
48.சேலம் சன்னா
49.தூயமல்லி
50.வாழைப்பூச் சம்பா
51.ஆற்காடு கிச்சலி
52.தங்கச்சம்பா
53.நீலச்சம்பா

தகவல் : **முனைவர் ஆ.மதிவாணன், தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம்.**

மேலும் விபரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம், தொலைபேசி எண் : 04365-299806, மின்னஞ்சல் : kvksikkal@tnfu.ac.in.

# வேளாண்மைத் துறையில் மின்னணு பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் வினியோகம்

கிருஷ்ணகிரி, ஜுன் 29

வேளாண்மைத்துறையில் மின்னணு பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் வினியோகம் செய்யும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பச்சையப்பன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாவட்டத்தில் வேளாண்மை துறையில் மின்னணு பரிவர்த்தனை மூலம் வேளாண் இடுபொருட்கள் வினியோகம் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை துறையின் கீழ் செயல் படும் வட்டார விரிவாக்க மைய கிடங்குகளில் இருந்து வினியோகம் செய்யப்படும் விதை, உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், நுண்ணூட்ட கலவைகள், விசை தெளிப்பான்கள், தார்பாய்கள் உள்ளிட்ட அனைத்து இடுபொருட்களையும் விவசாயிகள் தங்கள் ஏடிஎம் கார்டு மற்றும் யு.பி.ஐ & ஐ.டி. மூலமாக எந்த சிரமமும் இல்லாமல் எளிதில் பெற முடியும். அனைத்து விவசாயிகளும் இந்த வசதிகளை எளிதில் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு விற்பனை முனைய கருவி வழங்கப்பட்டு மின்னணு பரிவர்த்தனை முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் இந்த வசதியை பயன்படுத்தி இடுபொருட்கள் வாங்கிட முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.